# ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## சாதாரணக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **ஜீன்** மாதம் **28** ம் நாள் வெள்ளிக் கிழமை பிற்பகல் **4.00** மணியளவில் நடைபெற்ற **அவசரக்** கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :- திருமதி. அ. மாணிக்க அரசி, எம்.ஏ.,**
**தனி அதிகாரி.**

**பொருள் எண் : 152**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :153**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :154**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதம் ந.க.எண் 7366/2016/UPA-2M.E.1 நாள் 16.04.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1398/2019/A3, நாள் 23.04.2019 கடிதங்களில் தெருவோர வியாபாரிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் விரிவான செயலாக்க திட்ட அறிக்கை ( Detailed Implementation Plan ) தயார் செய்து அனுப்ப கோரப்பட்டுள்ளது. விரிவான செயலாக்க திட்ட அறிக்கை நகரில் உள்ள தெருவோர வியாபாரிகள் வியாபாரம் செய்யும் இடங்களை கண்டறிந்து உரிய புகைப்படங்கள் எடுத்து அவர்களுக்கான உட்கட்டமைப்பு ஆகியவை குறித்தும் மற்றும் அதற்கான Power Point Presentation தயார் செய்யப்பட வேண்டியுள்ளதால் கலந்தாலோசகர் (Consultant) மூலமான விரிவான செயலாக்க திட்ட அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும். எனவே மேற்கண்ட விவரப்படி விரிவன செயலாக்க திட்ட அறிக்கை (Detailed Implementation Plan) தயார் செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ.22000/ க்கும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 4622/2016/F1**

**பொருள் எண் :155**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு 2019-20 ம் ஆண்டிற்கு ஒரு ஜோடி காலனியும், ஓட்டுநர்களுக்கு ஒரு ஜோடி ஷூவும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/ க்கு மன்ற அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3326/2019/H1**

**பொருள் எண் :156**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் 2019-20ம் ஆண்டிற்கு துப்புரவு பணி மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும், பிளீச்சிங் பவுடர் (10 டன்) மற்றும் சுண்ணாம்புத்தூள் (10 டன்) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.8,00,000/ க்கு மன்ற அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3375/2019/H1**

**பொருள் எண் :157**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோவில் ஆடிப்பூர தேரோட்ட திருவிழா நடைபெற இருப்பதால், துப்புரவு பணியாளர்கள், சிறப்பு துப்புரவு பணிகளை மேற்கொள்ள துப்புரவு பணிக்கருவிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/ க்கு மன்ற அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3304/2019/H1**

**பொருள் எண் :158**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் சீருடை பெறத் தகுதியான பணியாளர்களான துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், குடிநீர் மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் மகப்பேறு ஆயாக்கள் ஆகியோர்களுக்கு 2019-20 ம் ஆண்டிற்கு சீருடைகள் வாங்கவும், மேற்படி சீருடைகளை அரசு அங்கீகாரம் பெற்ற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் வாங்குவதற்கும் மேலும் தையல் கூலி வழங்கவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/ க்கு மன்ற அனுமதிக்கு.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3325/2019/H1**

**பொருள் எண் :159**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 2018-19 ம் ஆண்டிற்கான வருவாய் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி, மற்றும் கல்வி நிதிக்கான கணக்குகளை தணிக்கைக்கு தயார் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற வழிகாட்டுதலின்படியும் அரசாணை எண் (M.S. No 187 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை MA2 நாள் 23.12.2015 ன் படியும் உள்ளாட்சி நிதி கணக்குகளை பட்டைய கணக்கரை வைத்து ஆண்டு கணக்குகள் தயார் செய்ய தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் திரு. வி. சீனிவாசன் பட்டைய கணக்கரை வைத்து ஆண்டு கணக்குகள் தயார் செய்த வகையில் செலவினத் தொகை ரூ.35,000/ வழங்க கோரியுள்ளதால் மேற்படி தொகையினை பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :160**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி 2017-18 ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைகளை ( பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி) தட்டச்சு செய்த வகையில் உத்தேச செலவினம் ரூ.11,000/ க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :161**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு 2018-19 ம் ஆண்டிற்கான வருமான வரி பிடித்தம் செய்து மத்திய அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனை இணைய தளத்தில் ( E TDS) பதிவு செய்யவும், அனைத்து பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு படிவம் 16 தயார் செய்து வழங்கவும், திரு. ஏ. சரவணன் ( Income Tax Practitioner ) அவர்கள் மூலமாக மேற்கொள்ளவும் அதற்கான கட்டணம் நகராட்சி பணியாளர்களுக்கு ரூ.2800/ மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு ரூ.1800/ ஆக மொத்தம் ரூ.4600/ வழங்கவும் அனுமதிக்கு.

**ந.க.எண் 411/2019/C1**

**பொருள் எண் :162**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட மங்காபுரம் அய்யம்பட்டி மெயின் ரோடு சந்திப்பில் உள்ள சிறுபாலத்தில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் மேற்படி சிறுபாலத்தினை உயர்த்தி கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் மதிப்பிற்குரிய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வார்டு எண் 2 மங்காபுரம் மேல் பக்கம் தெற்குத் தெரு மற்றும் மங்காபுரம் மெயின் ரோடு சந்திப்பில் உள்ள சிறுபாலத்தினை (அங்கன்வாடி அருகில் ) உயர்த்திக் கொடுக்க அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட இரண்டு சிறுபாலங்களையும் உயர்த்திக் கொடுக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.75000/ க்கு மன்ற அனுமதிக்காக. மேற்கண்ட செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கு.

**ந.க.எண் 3000/2019/ H1**

**பொருள் எண் :163**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை முன்னிட்டு குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் தொடர்புடைய இதர குறைகளை பொது மக்கள் நகராட்சியில் உடனடியாக தகவல் தெரிவிக்கும் பொருட்டு Toll Free No கொண்ட புதிய இணைப்பு பெற வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 26.06.2019 ம் தேதிய தொலைபேசி செய்தி வழி அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இந்நகராட்சிக்கு Toll Free No இணைப்பு பெற வைப்பு தொகை மற்றும் சேவை வரி உட்பட ரூ.13450/ ஐ BSNL , ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்திற்கு புதிய இணைப்புக் கட்டணம் பெறவும், கட்டணம் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) அனுமதிக்கலாம்.
2) நகர்மன்ற முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண் 3178/2019/E2**

<u>பொருள் எண் :164</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பத்து இடங்களில் அமைந்துள்ள மினிபவர் பம்பில் மின் மோட்டார் வாங்கி பொருத்தப்பட்டு பல ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது மின் மோட்டார்கள் கண்டமான நிலையில் இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்பொழுது மேற்படி மினி பவர் பம்ப் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றில் போதுமான அழுத்தம் (Yield) உள்ளபடியால் மேற்கண்ட பத்து இடங்களில் புதியதாக மின் மோட்டார் பொருத்தி இயக்கினால் மட்டுமே அவ்விடங்களில் வறட்சியை போக்க இயலும் என்பதால் மேற்கண்ட பத்து இடங்களில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் புதிதாக மின் மோட்டார் பொருத்தி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் அங்கீகரிக்க. மேற்கண்ட பணியினை வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு.

**ந.க.எண் 3178/2019/E2**

<u>பொருள் எண் :165</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிமையாண கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 107 நாள் 07.03.2019 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருத்திய கட்டிட உரிமையாணை கட்டண பட்டியலை விருதுநகர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக பிரசுரம் செய்யவும் அதற்கான கட்டணம் ரூ.12,600/ க்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண் 2843/2017/ F1**

<u>பொருள் எண் :166</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 A 5009 க்கு 01.07.2019 ம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெறவும் மற்றும் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.45000/ க்கு மன்றப் பொருள் அனுமதிக்கு.

<u>**வேலைகளின் விபரம்**</u>

1) நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து ஆயில் பில்டர் மாற்றுதல்.
2) ஹைட்ராலிக் ஹாக்கி ஓவராயிலிங் செய்தல்.
3) ஹைட்ராலிக் ஏல் லையனர்கள் பழுது நீக்கம் செய்தல்.
4) ரேடியேட்டர் ஓவராயிலிங் செய்தல்.
5) வண்டியிலுள்ள கலர் பெயிண்ட் அடித்தல், எழுத்து வேலைகள்.
6) டயர்ராடு புதியது மாற்றுதல், வெல்டிங் வேலைகள் செய்தல்.
7) கிளீனர் சீட் உறை மாற்றுதல், டிரைவர் சீட் உறை மாற்றுதல்.
8) எலக்ட்ரிக் வேலைகள் மற்றும் பல்புகள், மற்ற வேலைகள், செல்ப் மோட்டார் சர்வீஸ் வேலை பார்த்தல்.
9) மாசு கட்டுப்படு சான்று ஒளிநாடா தகுதிச் சான்று பெறுதல்.
10) வாட்டர் சர்வீஸ், கிரிஸ் சர்வீஸ் வேலைகள்.
11) கியர் பாக்ஸ் சிலன்ஸி வேலைகள்.
12) ஸ்டேரிங் பாக்ஸ் லைன் வேலை.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3215/2019/H 2**

<u>பொருள் எண் :167</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 84 C 9626 க்கு 2 டயர்களுக்கு ரீ பட்டன் மாற்றம் செய்யும் பணிக்கு மன்ற தீர்மான எண் 134, நாள் 31.05.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **வ.எண்** | **வேலையின் விபரம்** | **விலை விகிதம்** | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | Sp Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre, Municipal Complex, Rajapalayam. |
| 1 | TN 67 C 9626 க்கு 2 டயர்களுக்கு ரீ பட்டன் மாற்றம் செய்யும் பணி | 11,800/- | 12,800/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் ரூ.11,800/ கொடுத்துள்ள ஆர்.எ. 267, ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம். ( **ந.க.எண் 1247/2019/H 2** )

**பொருள் எண் :168**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 67 AZ 1287 க்கு புதிய மின்கலம் ( 13 பிளேட்) வாங்கும் பணிக்கு மன்ற தீர்மான எண் 131, நாள் 31.05.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | Sp Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre, Municipal Complex, Rajapalayam. |
| 1 | TN 67 AZ 1287 க்கு புதிய மின்கலம் ( 13 Plate ) வாங்கும் பணி | 10,600/- | 11,100/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் ரூ.10,600/ கொடுத்துள்ள ஆர்.எ. 267, ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 1512/2019/H 2**

**பொருள் எண் :169**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி சக்கரைக்குளம் தெரு நகராட்சி அலுவலகம் வடக்கு பக்கம் உள்ள முன்னாள் படைவீரர் மருத்துவமனையாக பயன்படுத்தப்பட்டு தற்போது காலியாக உள்ள கட்டிடத்தை கனரா வங்கிக்கு வாடகைக்கு விடும் பொருட்டு கட்டிடத்தில் இடையில் உள்ள சுவர்களை அப்புறப்படுத்தி பழுது நீக்கப் பணிகள் மற்றும் Stock Room கழிப்பறை வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ள ரூ.9.00(ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும் ) இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண் 123 நாள் 31.05.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.06.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. ஜி. மணிகண்டன், ஒப்பந்தகாரர்,<br>25/1, மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.008% குறைவு |
| 2 | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | 2.5% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.008% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. ஜி. மணிகண்டன், ஒப்பந்தகாரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 2507/2019/A 3**

**பொருள் எண் :170**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு எண் 9, ரைட்டன்பட்டி ஓட்டமடம் பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பறையை பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள ரூ.1.50(ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண் 122 நாள் 31.05.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.06.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. G. வெங்கடேசன், ஒப்பந்தகாரர்,<br>54, மேட்டு நாயுடு தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 0.15% குறைவு |
| 2 | திரு. V. அழகர்ராஜ் (AVK Constrction)<br>101, மாயாண்டிபட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 5.73% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.15% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. ஜி. வெங்கடேசன், ஒப்பந்தகாரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 885/2019/E1**

**<u>பொருள் எண் :171</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மஜீத் நகர் பணியாளர் குடியிருப்பு எண் 2,7 ல் பழுது நீக்கப் பணிகள் மற்றும் முகப்பில் உள்ள பழுதடைந்துள்ள வாயில் கதவை சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.3.70(ரூபாய் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும் ) இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மான எண் 122 நாள் 31.05.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.06.2019 தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு தொகை சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. R. பொன்னுச்சாமி, ஒப்பந்தகாரர், தைலாகுளம். | 0.61% குறைவு |
| 2 | திரு. V. அழகர்ராஜ் (AVK Constrction) 101, மாயாண்டிபட்டித் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர். | 3.92% அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை காட்டிலும் 0.61% குறைவாக ஒப்பந்தப்புள்ளி தந்துள்ள திரு. ஆர். பொன்னுச்சாமி, ஒப்பந்தகாரர் தந்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 2030/2019/E1**

**<u>பொருள் எண் :172</u>**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 K 0312 க்கு பழுது நீக்கம் செய்து, தகுதி சான்று பெற்று மற்றும் வேலைகளை செய்வதற்கு மன்ற தீர்மான எண் 132, நாள் 31.05.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | Raj Paul Auto Mobile, Srivilliputtur | JSP Auto Works, Srivilliputtur. |
| 1 | வண்டியில் உள்ள அனைத்து ஆயில்கள், மற்றும் டீசல் பில்டர், மற்றும் ஆயில் பில்டர் புதியது மாற்றுதல். | 2000/ | 3000/ |
| 2 | கிளட்சு சம்மந்தப்பட்ட வேலைகள் சரிசெய்து புஷ்கிட் புதியது மாற்றுதல். | 2000/ | 2000/ |
| 3 | வாட்டர் பம்ப் புதியது மாற்றி ரேடியேட்டர் சர்வீஸ் செய்து மற்றும் பேன் பெல்ட் புதியது மாற்றுதல். | 6000/ | 6000/ |
| 4 | வண்டியில் உள்ள முன்பக்க தொட்டி மற்றும் பின்புறமுள்ள தொட்டியில் டிங்கரிங் வேலைகள் சரிசெய்தல். | 5000/ | 5000/ |
| 5 | பட்டை கட்டு விரைப்பு ஏற்றி புஷ்கட் புதியது மாற்றி இதர வேலைகள் சரிசெய்தல். | 2000/ | 2000/ |
| 6 | நான்கு புறமுள்ள வீல்களில் கிரீஸ் பேக்கிங் செய்து, வயரிங் வேலைகள் செய்தல். | 2500/ | 2500/ |
| 7 | பிரேக் சம்மந்தப்பட்ட அனைத்து வேலைகள் சரி செய்தல். | 1500/ | 1500/ |
| 8 | வண்டியில் உள்ள கலர் பெயிண்ட் புதுப்பித்து F.C க்கு இதர வேலைகள் சரி செய்தல். | 6000/ | 6000/ |
| 9 | சான்றிதழ் மற்றும் மாசு கட்டுப்பாடு சான்றிதழ் புதுப்பித்து தருதல். | 2000/ | 2000/ |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.29000/ கொடுத்துள்ள Raj Paul Auto Mobile, Srivilliputtur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2576/2019/H2**

பொருள் எண் :173

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 K 9704 மற்றும் TN 84 4592 க்கு பழுது நீக்கம் செய்து, தகுதி சான்று பெற்று மற்றும் வேலைகளை செய்வதற்கு மன்ற தீர்மான எண் 133, நாள் 31.05.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | Sp Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre, Municipal Complex, Rajapalayam. |
| 1 | 6 வீல் கிரீஸ் பேக்கிங் செய்ய வேண்டும், டெய்லர் வீல் பேரிங்குகள் 2 எண்ணம் புதியது. | 4000 | 4200 |
| 2 | ஆயில் பில்டர், டீசல் பில்டர் புதியது மாற்றுதல். | 2000 | 2200 |
| 3 | பவர் பேரிங் ஜாக்கி வேலை பார்க்க வேண்டும். | 5200 | 5300 |
| 4 | டெய்லர் ஜாக்கி வேலை பார்க்க வேண்டும் | 5000 | 5200 |
| 5 | டெய்லர் தொட்டி பழுதான இடத்தில் புதிய தகடு பொருத்த வேண்டும். | 4500 | 4700 |
| 6 | டாப் துணி புதியது, டிரைவர் சீட் துணி புதியது, ரேடியேட்டர் சர்வீஸ் பார்க்க வேண்டும். | 3000 | 3300 |
| 7 | இன்ஜின் மற்றும் டெய்லர், டிங்கர் வேலை பார்த்து பெயிண்டிங் அடித்து எழுத்து வேலை பார்க்க வேண்டும். | 14400 | 14600 |
| 8 | வயரிங் வேலை பார்த்து லைட் செட் புதியது மாற்ற வேண்டும். | 2500 | 2700 |
| 9 | தகுதி சான்றிதழ் மற்றும் மாசு கட்டுப்பாடு சான்றிதழ் புதுப்பித்து தருதல். | 1800 | 2000 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.42400/ கொடுத்துள்ள ஆர்.எ. 267 ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 2396/2019/H2**

பொருள் எண் :174

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 A 5009 க்கு பழுது நீக்கம் செய்து, தகுதி சான்று பெறும் வேலைகளை செய்வதற்கும், மன்ற முன் அனுமதி நாள் 14.06.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 20.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | Sp Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre, Municipal Complex, Rajapalayam. |
| 1 | நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து ஆயில் பில்டர் மாற்றுதல் | 3600 | 3800 |
| 2 | ஹைட்ராலிக் ஹாக்கி ஓவராயிலிங் செய்தல் | 6000 | 7000 |
| 3 | ஹைட்ராலிக் ஏர் லைனர்கள் பழுது நீக்கம் செய்தல். | 2000 | 2200 |
| 4 | ரேடியேட்டர் ஓவராயிலிங் செய்தல் | 1500 | 1600 |
| 5 | வண்டியிலுள்ள கலர் பெயிண்ட் அடித்தல், எழுத்து வேலைகள். | 12000 | 12500 |
| 6 | டயர்ராடு என்பதை புதியது மாற்றுதல் வெல்டிங் வேலைகள் செய்தல் | 5500 | 5600 |
| 7 | கிளீனர் சீட் உறை மாற்றுதல், டிரைவர் சீட் உறை மாற்றுதல். | 1000 | 1100 |
| 8 | எலக்ட்ரிக் வேலைகள் மற்றும் பல்புகள் மற்ற வேலைகள் செல்ப் மோட்டார் சர்வீஸ் வேலை பார்த்தல். | 2500 | 2600 |
| 9 | மாசு கட்டுப்பாடு சான்று ஒளிநாடா தகுதிச்சான்று பெறுதல். | 3000 | 3100 |
| 10 | வாட்டர் சர்வீஸ், கிரீஸ் சர்வீஸ் வேலைகள். | 1000 | 1100 |
| 11 | கியர் பாக்ஸ் சிலன்ஸி வேலைகள் | 3000 | 3100 |
| 12 | ஸ்டேரிங் பாக்ஸ் லைன் வேலை. | 3700 | 3800 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.44800/ கொடுத்துள்ள ஆர்.எ. 267 ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள மன்ற முன் அனுமதிக்காக.

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 3215/2019/H 2**

பொருள் எண் :175

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 AZ 1287 க்கு பழுது நீக்கம் செய்து, தகுதி சான்று பெற்று மற்றும் வேலைகளை செய்வதற்கு, மன்ற தீர்மான எண் 140, நாள் 31.05.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 10.06.2019 ம் தேதி கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | வேலையின் விபரம் | விலை விகிதம் | |
|---|---|---|---|
| | | RA 267 Srivilliputtur Block Agro Engg Service and Co-op Centre, Srivilliputtur. | Sp Spl 177 Rajapalayam Agro Engg Service Co-op Centre, Municipal Complex, Rajapalayam. |
| 1 | இன்ஜின் ஆயில், கியர் ஆயில், கிரவுன் ஆயில் மாற்றுதல் | 2500 | 2700 |
| 2 | நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து ஆயில் சீல் மாற்றுதல் | 4600 | 4800 |
| 3 | பிரேக் செக்கப் செய்து நான்கு வீல் சீலிண்டர்கள் மாற்றி பிரேக் ஓவராயிலிங் செய்தல் | 7600 | 7800 |
| 4 | ஸ்டேரிங் பாக்ஸ் ஓவராயிலிங் செய்து செக்கப் செய்தல், வண்டியின் பாடியில் வெல்டிங் வேலைகள் செய்தல், வண்டியில் உள்ள கலர் பெயிண்ட் அடித்தல். | 12000 | 12200 |
| 5 | கிளட்ச் மேல் சிலிண்டர், கீழ் சிலிண்டர் மாற்றி செக்கப் செய்தல். | 8000 | 8300 |
| 6 | ஜாயிண்ட் போல்ட் நட்டுகள் மாற்றி செக்கப் செய்தல் இதர போல்ட் நட்டுகள் பொருத்துதல். | 3000 | 3200 |
| 7 | ஹைட்ராலிக் ஆயில் பம்ப் சீல் மாற்றுதல், சின்ன ஜாக்கி ஆயில் பீப் மாற்றுதல் | 7400 | 7600 |
| 8 | இன்ஜின் ஏர்பில்டர் அசம்பிளி செய்தல், ஹைட்ராலிக் பெரிய ஜாக்கி ஆயில் சீல் மாற்றி ஓவராயிலிங் செய்தல், வண்டியின் பாடியில் வெல்டிங் வேலைகள் செய்தல். | 6000 | 6300 |
| 9 | ஹைட்ராலிக் சிறிய ஜாக்கி பார்பெட் பிரண்ட், பேக் ஆக்சில் போட்டு வெல்டிங் செய்தல். | 4200 | 4400 |
| 10 | வண்டியில் உள்ள வயரிங் வேலைகள் சரி செய்து, லைட் செட் புதியது மாற்றி மாசு கட்டுப்பாடு சான்றிதழ் பெற்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்றிதழ் பெற்று தருதல். | 2500 | 2700 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ரூ.57800/ கொடுத்துள்ள ஆர்.எ. 267 ஸ்ரீவில்லிபுத்தூர் பிளாக் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் மற்றும் கூட்டுறவு சென்டர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1715/2019/H2

பொருள் எண் :176

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பத்து இடங்களில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் புதிதாக மின் மோட்டார் பொருத்தி பணிகளை மேற்கொள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 03.06.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 12.06.2019 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. பொன்னுச்சாமி | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| 2 | திரு. அழகர்ராஜ் | மதிப்பீட்டை விட 4.09 % அதிகம். |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பொன்னுச்சாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்காக.

**ந.க.எண் 3178/2019/E 2**

பொருள் எண் :177

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதங்களில் உபயோகமற்ற பழுதடைந்த மற்றும் சாலைப் பதிவு சான்றிதழ் இல்லாத பழைய வாகனங்களை Motor Vehicle Maintenance Department க்கு அனுப்பி முறையாக கழிவு செய்து அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட நான்கு வாகனங்கள் உபயோகமற்ற பழுதடைந்து மற்றும் இயக்குவதற்கு முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனங்களையும் கழிவு செய்யவும் மற்றும் பொது ஏலம் விடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும்.

| வ.எண் | வாகன எண் | வாகனம் வாங்கிய ஆண்டு | மொத்தம் ஓடிய கி.மீ | வாகனம் நிறுத்தப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | TN 67 Y 6657 | 15.12.1994 | 131271 | 2010 |
| 2 | TN 67 Y 6654 | 17.12.1994 | 134541 | 2010 |
| 3 | TN 67 V 1054 | 17.09.1998 | 84676 | 2013 |
| 4 | TN 67 V 7767 | 26.02.2000 | 7686 | 2014 |

மேலேகண்ட நான்கு வாகனங்களை கழிவு என சான்று பெறுவதற்கு விருதுநகர் அரசு தானியங்கி மோட்டார் வாகன பராமரிப்பு அனுப்புவதற்கும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு அனுப்புவதற்கும் மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

பொருள் எண் :178

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் விநியோக மினி டேங்கர் லாரி வாகனம் TN 67 V 1954 க்கு தகுதி சான்று 25.07.2019 ம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்கண்ட வாகனத்திற்கு தகுதி சான்றினை புதுப்பிக்கும் பொருட்டு வாகனத்தை பழுது நீக்கி 2019-20 ம் ஆண்டுக்கு தகுதி சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.40,000/ க்கு (நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு அனுமதிக்கலாம்.

**பொருள் எண் :181**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியின் மொத்த மக்கள் தொகை 75373 ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தினசரி தண்ணீரின் அளவு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் 67.83 லட்சம் லிட்டர் கொடுக்கப்பட வேண்டும். இந்நகர் பகுதிகளில் **13364** குடிநீர் இணைப்புகள் உள்ளன. அதில் வீட்டு உபயோகத்திற்கென 13056 குடிநீர் இணைப்புகளும், வீடல்லாத பிற பயன்பாட்டிற்காக 308 இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்நகர் பகுதியில் மழைக்காலங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் சராசரி நாள் ஒன்றுக்கு 35.00 லட்சம் லிட்டர் தண்ணீரும், நகராட்சி பராமரிப்பில் உள்ள பேயனாற்றுப் படுகையில் இருந்து நாள் ஒன்றுக்கு 14.00 லட்சம் லிட்டர் தண்ணீரும், சிறுமின் விசை இறைப்பான்கள் மூலமாக 2.00 லட்சம் லிட்டர் தண்ணீரும், ஆழ்குழாய் கிணறுகள் மூலமாக 1.00 லட்சம் லிட்டர்தண்ணீரும் பெறப்பட்டு நகர் பகுதிக்கு மொத்தம் 52.00 லட்சம் லிட்டர் வீதம் 69 LPCD தண்ணீர் 4 தினங்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது 2019 ம் ஆண்டு வறட்சி காலமாக உள்ளதால் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் சராசரி நாள் ஒன்றுக்கு 26.00 லட்சம் லிட்டர் தண்ணீரும், பேயனாற்றுப் படுகையில் இருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 14.00 லட்சம் லிட்டர் தண்ணீரும் 206 சிறுமின் விசை இறைப்பான்கள் மூலமாக 2.00 லட்சம் லிட்டர் தண்ணீரும் 182 ஆழ்குழாய் கிணறுகள் மூலமாக 1.0 லட்சம் லிட்டர் தண்ணீரும் பெறப்பட்டு நகர் பகுதிக்கு மொத்தம் 43.00 லட்சம் லிட்டர் தண்ணீர் 57 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யும் கால இடைவெளி அதிகரித்து வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அனைத்து பகுதிகளுக்கும் ஒரே சீராக குடிநீர் வழங்க இயலாத நிலையில் உள்ளதால் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கென புதிய தனிக்குடிநீர் திட்டம் அமைக்க குடிநீர் ஆதாரம், குடிநீர் விநியோகம் மேம்பாடு மற்றும் வீட்டு இணைப்பு ஆகியவற்றை சேர்த்து நகரின் 33 வார்டுகளிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோகம் முறையாக District Metering Area ( DMA) ன்படி மாற்றியமைக்க விரிவான திட்ட அறிக்கை திட்ட மேம்பாடு மான்ற நிதி ( PDGF) நிதியிலிருந்து தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***அலுவலகக்குறிப்பு:-*** அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3210/2019/A2

**பொருள் எண் :182**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான ஒன்பது ஆண்டுகளுக்கு உரிம ஆணை வழங்கிய கடைகளுக்கு ஒவ்வொரு மூன்றாண்டு உரிம காலம் முடிந்தவுடன் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை புதுப்பித்து வாடகையில் 15% வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007 ன் படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அட்டவணையில் கண்டுள்ள கடை வாடகைதாரர்கள் மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து தருமாறு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துள்ளனர். எனவே அரசாணையின்படி கீழ்கண்டுள்ள கடை வாடகைதாரர்களுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு கடைகளை 15% வாடகை உயர்வு செய்து புதுப்பித்து உரிமம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடை வரிவிதிப்பு எண் | கடை எண் | வாடகை தாரர் பெயர் | கடை உரிமம் முடியும் காலம் | கடை உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப் பட்டுள்ள வாடகை |
|---|---|---|---|---|---|---|---|
| **பெரியார் வணிக வளாகம் திறந்த வெளிக் கடைகள்** | | | | | | | |
| 1 | 130/288 | 22 | அ. சடையப்பன் | 28.02.19 | 01.03.2019 முதல் 28.02.2021 | Rs.542/ | Rs.623/ |
| 2 | 130/291 | 4 | ஜி. ஆத்தியப்பன் | 28.02.19 | 01.03.2019 முதல் 28.02.2021 | Rs.776/ | Rs.892/ |
| 3 | 130/289 | 8 | ஜி. ஆனந்தராஜ் | 28.02.19 | 01.03.2019 முதல் 28.02.2021 | Rs.288/ | Rs.331/ |
| 4 | 130/290 | 28 | ஜி. ஆனந்தராஜ் | 28.02.19 | 01.03.2019 முதல் 28.02.2021 | Rs.449/ | Rs.516/ |
| 5 | 130/268 | 5 | ஜி. மருதலட்சுமி | 31.10.18 | 01.11.2018 முதல் 31.10.2020 | Rs.472/ | Rs.543/ |
| 6 | 130/271 | 11 | ஜி. மருதலட்சுமி | 31.10.18 | 01.11.2018 முதல் 28.02.2020 | Rs.472/ | Rs.543/ |

***அலுவலக குறிப்பு :-*** அனுமதி வழங்கலாம். ( ந.க.எண் 7430/2018/A3)